**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.311/2017** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முத்து | **வயது** | : | 54 |
| **த.பெ** | : | மௌளவு (எ) கன்னியப்பன் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | பெரணம்பாக்கம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>23.02.2026 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)**பி.சா.ஆ-1** யார் யாருக்கு எழுதிகொடுத்த ஆவணம் என்றால் உஷா என்பவர் முத்து என்பவருக்கு எழுதிகொடுத்த ஆவணம் ஆகும். **(தற்போது சாட்சி பி.சா.ஆ-1 ஆவணம் பங்காரு (எ) லட்சுமி என்பவரிடமிந்து உஷா சர்வே நெம்பர் 195/1 பி விவசாய நிலம் 1 ஏக்கர் 95 செண்டை கிணறுமேடு 4 ½ செண்ட் வாங்கியுள்ளார் என்று மாற்றிகூறுகிறார்) பி.சா.ஆ-2**, 03.04.2003 தேதியிட்ட கிரையபத்திரம் யார் யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் உஷா என்பவரிடமிருந்து முத்து என்பவர் கிரையம் பெறுகிறார். 02.07.1997 ல் பங்காரு (எ) லட்சுமி தாவா சொத்து ஒரு சர்வே நெம்பரை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 02.07.1997 தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

2)தாவா சொத்திற்கு என் தரப்பில் பட்டா அல்லது சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்திற்குண்டான 03.03.2005 தேதியிட்ட வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேன். சர்வே நெம்பர் 195/பி1 க்கான பட்டா என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை, கிரையபத்திரம் தான் உள்ளது, பட்டா இல்லை. 03.04.2003 ல் நான் சர்வே நெம்பர் 195/பி1 இடத்தை கிரையம் பெற்றேன். எனக்கு யார் கிரையம் கொடுத்தார்கள் என்றால் உஷா என்பவர் கிரையம் கொடுத்தார். மேற்படி உஷா என்பவர் பெயரும் வருவாய் துறை ஆவணங்களில் இல்லை என்றால் இல்லை. 2004 ல் வாதி வழ்ககு தாக்கல் செய்துள்ளார், நான் 2003 ல் கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். சர்வே நெம்பர் 195/பி1 கிரையம்கொடுத்த உஷா பெயரிலும் சிட்டா இல்லாததால் என் கிரையதாரருக்கும் அதில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

3)உஷா பட்டியல் இனத்தை சார்ந்தவர் இல்லை என்றால் சரிதான். சர்வே நெம்பர் 195 பி/1 சொத்தானது பட்டியல் இனத்தை சார்ந்தவருக்கு தான் உரிமை என்பதால் உஷா பெயரிலும், என் பெயரிலும் பட்டா மாறவில்லை என்றால் சரிதான். உஷா என்பவருக்கு யார் கிரையம்கொடுத்தார் என்றால் பங்காரு (எ) லட்சுமிக்கு 1997 ல் கிரையம் கொடுத்தார். பங்காரு (எ) லட்சுமி அவர்களுக்கு யார் கிரையம் கொடுத்தது என்றால் முனுசாமி, சரோஜா இருவரும் கணவன், மனைவி இருவரும் சேர்ந்துதான் கிரையம் கொடுத்தார்கள். முனுசாமியின் தந்தை பெயர் ரங்கசெட்டி ஆகும். முனுசாமி, சரோஜா யாரிடமிருந்து கிரையம் பெறுகிறார்கள் என்றால் நாராணசாமி செட்டியார் மகன்

வாதி அய்யாவு இடமிருந்து கிரையம் பெறுகிறார்கள். மேற்படி அசல் ஆவணம் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன், அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

4)என்னுடைய கிரையதாரர் மேற்படி முனுசாமியும், வாதியும் கிரையம்பெற்ற அசல் கிரையபத்திரத்தை வாங்கியுள்ளார்களா என்றால் அதைபற்றி நான் கேட்கவில்லை. அசல் ஆவணம் இருந்தால்தான் வாதி முனுசாமி மற்றும் சரோஜாவிற்கு தாவாசொத்தை எழுதிகொடுத்துள்ளார்களா இல்லையா என்று தெரியவரும் என்றால் நான் சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன். வாதி யாருக்கும் தாவாசொத்தை கிரையம் கொடுக்கவில்லை, ஆகையால் **பி.சா.ஆ.4** போர்ஜரியான ஆவணம் என்றால் சரியல்ல. மேலும் நான் 2005 வருடத்திற்கான ரசீதை தான் தாக்கல் செய்துள்ளேன், 2003 லிருந்து 2004 வரை உள்ள வரிரசீதுகள், 2005 க்கு பிறகு இன்றுவரை எந்த ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும், **பி.சா.ஆ.3** ஆவணத்தில் வருவாய்துறையின் சீல் எதுவும் இல்லை, மேலும் அந்த ஆவணம் கையால் எழுதப்பட்ட ஆவணம் என்பதால் அது செல்லுபடி ஆகாது என்றால் சரியல்ல.

5)மேலும், நான் தாக்கல் செய்த **பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4** வரையுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதி மற்றும் அவரின் பாகதாரர்கள் தரப்பில் தாவாசொத்திற்குண்டான வருவாய்துறை ஆவணங்கள் உள்ளது என் பெயரில் எதுவும் வருவாய் துறை ஆவணங்கள் இல்லை என்றால் வாதியின் தாத்தா ரங்கசெட்டி பெயரிலும், பீமன் மனைவி கன்னியம்மாள், ரங்கசெட்டி மனைவி நீலாம்பாள் பெயரிலும் கூட்டுபட்டாவாகத்தான் இருந்தது. மேற்படி 3 பேர்களும் வாதியின் முன்னோர்கள் என்றால் ரங்கசெட்டி மற்றும் நீலாம்பாள் மட்டும் தான் வாதியின் முன்னோர்கள், கன்னியம்மாள் 3ம் நபர் ஆவார், ரங்கசெட்டிக்கு 4 மகன்கள் நாராயணசாமி, முனுசாமி, பலராமன், ஊமை (எ) கோவிந்தசாமி ஆகும், சர்வே நெம்பர் 195/பி1-ஐ வாதி முனுசாமிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.03.05 11:21:07 +0530

District Munsif,
Polur.